

# தையலர்க்கான தையற்கலை




நூலாசிரியர்:

உடுவிலூர் கலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தையலர்க்கான தையற்கலை



ஆக்கம்:

உடுவிலூர் கலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

தனித்திருந்து
விழித்திருந்து
பசித்திருந்து - விரதங்கள்
பல இருந்து
பெண்மகளாய் எனைப்
பெற்றெடுத்து
என்னை விட்டுச் சென்ற
அன்புத் தந்தைக்கு
இந்நூல் சமர்ப்பணம்...

நூலாசிரியர்
**உடுவிலூர் கலா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் சிந்தையிலிருந்து....

ஆடையில்லாதவன் அரை மனிதன் ஆள்பாதி ஆடைபாதி என்ற அடிகள் உடைகளின் முக்கியத்து வத்தை எடுத்தியம்புகின்றன மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் உடையும் முக்கியமானது ஆதி மனிதன் இலைகுழைகளால் மேனியை மறைத்து வாழ்ந்து வந்தான். காலப்போக்கில் நாகரிக வளர்ச்சிக் குட்பட்டு உடை ஆக்கத்தில் முன்னேற்றமடைந்ததன் பலனாக தையற்கலையானது சமுதாயத்தில் மட்டு மல்ல உலகநாடுகளிலும் கூட மிக முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது பிடித்து வருகிறது

அறுபத்து நான்கு கலைகளுள் தையற்கலையும் ஒன்று இன்றைய உலகில் நாகரிகத்தைப் பறைசாற்றி நிற்பது தையற் கலையே இதனைப் பெண்கள் விரும்பிக் கற்கின்றனர் தொழிலாகச் செய்கின்றனர் இன்றைய வேலைவாய்ப்பின்மை காரணமாக ஆண்களும் இத் தொழிலைச் செய்கின்றனர் ஆயினும் தையற்கலைக்கும் பெண்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு .பெண்களுக்கு தையல் என்று ஒரு பெயருமுண்டு தையற்கலை பெண்களுக்கு கிடைத்த ஒரு கலைப் பொக்கிசம் என்றே கொள்ளலாம் பெரும் வரப்பிரசாதமும் கூட. இது வாழ்வின் வழிகாட்டியாக அமைகிறது இன்று எம் நாட்டில் வகை தொகை இன்றி அதிகரித்து விட்ட விதவைப் பெண்கள் அநேகரினதும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துகின்ற கைகொடுக்கின்ற தொழிலாகத் தையற்கலை உள்ளது

பெண்களின் பொழுதுபோக்காகவும் வீட்டிலிருந்தவாறே வருமானத்தை ஈட்டவும் வறுமையைப் போக்கவும் இக்கலை பெரிதும் கைகொடுத்து உதவுகின்றது மனத்தாக்கத்திற்குள்ளான பல பெண்களின் மனங்களை ஆற்றுப்படுத்தும் சிறந்த மருந்தாகக் கூட தையற்கலை உள்ளமை கண்கூடு

குறிப்பாகப் பெண்கள் இக்கலையைக் கற்றல் அவசியம் உலகிலேயே தையற் கலையானது சிறப்படைந்து முன்னிலையில் நிற்கும் இவ்வேளையில் கிழிந்த துணி கூடத் தைக்கத் தெரியாத நிலையில் எத்தனையோ பெண்கள் இன்றும் உள்ளனர் என்ற கசப்பான உண்மையையும் இவ்விடத்தில் கூற நான் விரும்புகின்றேன்

தையற்கலையானது ஒரு கௌரவமான தொழில் மட்டுமல்ல சமுதாய மேம்பாட்டிற்கான மதிப்பான ஒரு நிலையைப் பெண்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கிறது கலையுணர்வு அதிகமுள்ளவர்கள் இத் தொழிலைச் செய்யும்போது அவர்கள் விரும்பிய வடிவமைப்புகளில் அதனைச்செய்து கொள்ளலாம் இதனால் அவர்கள் சிறந்த கலைஞர்களுமாகின்றனர்

ஒருவன் அணியும் உடையைக்கொண்டு அவனது மனோ நிலைகளையும் ஒழுக்கத்தையும் கணிப்பிடலாம் அதே போல் ஒருவரால் வடிவமைக்கப்படும் உடையைக் கொண்டு அவரது உள்ளார்ந்த கலையுணர்வை மதிப்பிடலாம். சிறந்த முறையில் வடிவமைப்பது ஆடையைப் பிரசவிக்கும் கலைஞருக்கு கிடைக்கும் வரவேற்பும் மரியாதையும் பெறுமதிமிக்கவை

அதேநேரம் அழகான நேர்த்தியான ஆடையை வடிவமைத்த கலைஞரின் மனதில் பூரிப்பும் மன நிறைவும் கிடைக்கிறது அழகுக்கு கிடைக்கிறது அழகுக்கு அழகு செய்பவர் யார்? என்றால் அது பெண்களே அதுவும் தையற்காரரே என்பதே இன்றைய நாகரிக உலகில் ஓங்கி ஒலிக்கும் குரல் இன்றைய காலத்தின் முக்கிய தேவை கட்டாயமானது தையற்கலை இது உண்மை என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. அத்தோடு இனிவரும் காலங்களிலும் இக்கலையின் தேவை அனைவருக்கும் கட்டாயமானது என்பதை மனதில் கொள்ளல் அவசியம் அதனால் மிகவும் சிறப்பான உயர்நிலை அடையும் அரிய வாய்ப்பு இது என்றே கூறலாம். இத் தொழிலைக்கற்றுத் தேர்ந்துள்ளேன் என்பதையிட்டு நான் பெருமிதமடைகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று அநேக குடும்பங்களை வாழவைக்கும் தையற்கலையைப் பெண்கள் சரிவரக்கற்க வேண்டும் தையற்கலைஞர்கள்பல வகையினர் உள்ளனர் அதாவது மேலோட்டமாகத் தைப்பவர்கள் அடிப்படையிலிருந்து முறையாகக் கற்றுத் தைப்பவர்கள் கண்ணால் பார்த்துத் தைப்பவர்கள் எனப் பல தரப்பினரான கலைஞர்கள் இருந்தாலும் அடிப்படையிலிருந்து கற்று Block, without block முறைகளை சரிவர நுணுக்கங்களோடு தெரிந்து தேர்ச்சிபெற்று தொழில் செய்பவர்களே சிறந்த முறையில் இக்கலையைத் தொடர முடியும் பல வருடங்கள் தையலைத் தொழிலாகக் கொண்டவர்களாலும் கூட சரியான அடிப்படை அறிவோ நுணுக்கங்களோ தெரியாமல் இல்லாமல் இக்கலையைத் தொழிலாகக்கொள்ள முடியாது என்பது எனது அபிப்பிராயம்

தையலில் அடிப்படைத்தையல் அலங்காரத் தையல் நுட்பத் தையல் என மூவகைத் தையல்கள் உள்ளன அடிப்படையிலிருந்து தையலைக்கற்காதவர்கள் இத் தையல்களைக் கற்றுக் கொள்ள வாய்ப்பில்லை வருமானத்துக்காக தையலைக் கற்பவர்கள் ஓரிரு மாதங்களில் வெட்டித் தைக்கக் கற்றுக் கொள்கின்றனர் தையல்கள் அருகிவருகின்றன இன்றைய தையற் கலைஞர்கள் யாவருக்கும் தையல்களோ தையல் விளக்கங்களோ முழுமையாக இல்லை அவர்களது பிரதான நோக்கம் வெட்டித் தைப்பதே தையற் கலையைக் கற்று வீட்டில் இருந்தபடியே வருமானம் ஈட்ட விரும்பும் பெண்கள் ஒருபடி மேலேறி தையலை முழுமையாகக் கற்க வேண்டும் என்கிற நோக்கோடு ஒரு படிக்கல்லாக தையலர்கான தையற்கலை என்னும் இந்நூலை சமுதாயத்தின் கரங்களில் தவழவிடுகிறேன் அருகிவருகின்ற தையல்களை நினைவூட்ட இந்நூல் உந்து சத்தியாக இருக்கும் என நம்புகிறேன் தையல் பெண்களின் மேலதிக தகமையாகும் ஆண்களின் கைகளை எதிர்பார்த்து பெண்கள் இருக்கும் நிலையை மாற்றி சொந்தக்காலில் நிற்க அனைத்துப் பெண்களும் தையலைக் கற்க வேண்டும் என்பதே எனது பேரவா.

எனவே இந்நூலானது தையற் கலையில் தேடல் உள்ளவர்களுக்கு பெரும் ஆசானாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**அன்புடன்**
**உடுவிலூர் கலா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

"உடுவிலூர் கலா" என சிறப்பித்து கூறப்படும் இந்நூலசிரியர் "தையலர்க்கான தையற்கலை"" எனும் அற்புதமான நூலை எழுதி வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று உடை. இந்த உடையானது, பல்வேறு முறைகளில் வடிவமைக்கப்படுகிறது. அவற்றிலும் பெண்கள். சிறுவர்கள். போன்றோரின் உடை அமைப்புக்கள் மிகவும் நுட்பமானவையும், அலங்காரமானவையுமாக அமைகிறது. இந்நூலாசிரியரும் நுட்பமான அலங்காரமான செயற் பாட்டுடன் கூடிய பெண்கள் சிறுவர் உடை வகைகள், அடிப்படை அலங்காரத் தையல்கள், துணையாணிகள் என்பவற்றை இந்நூலில் உள்ளடக்கியுள்ளார்.

இந்நூல் பாடசாலை மாணவர்கள் தையற்பயிற்சி பெறும் மாணவர்கள், சுயதொழில் பார்க்கும் நபர்கள் ஓய்வு நேரத்தை பயனுள்ள முறையில் செலவிடும் நபர்கள் போன்ற பலதரப் பட்டவர் களுக்கும் நல்லதொரு ஆசானாக அமைகிறது.

எனவே, இந்நூலை எழுதி வெளியிடும் ஆசிரியரின் பணி மேலும் வளர இறைவனை வேண்டி ஆசிரியரையும் வாழ்த்தி அவர் முயற்சி வெற்றியளிக்க ஆசி கூறுவதில் அகமகிழ்ச்சி அடைகிறேன்.

திருமதி.க.மோகனசுந்தரம்

ஆசிரிய ஆலோசகர்

மனைப்பொருளியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | : | தையலருக்கான தையற்கலை |
| ஆசிரியர் | : | உடுவிலூர் கலா<br>(ரவீந்திரகலா ஸ்ரீ பாஸ்கரன்) |
| வெளியீடு | : | 28.10.2016 |
| முகவரி | : | 2nd Love Lone, Uduvil. |
| தொலைபேசி இலக்கம் | : | 077 0724 900 |
| பதிப்பு விவரம் | : | முதற் பதிப்பு |
| பதிப்புரிமை | : | நூலாசிரியர் |
| மொத்த பக்கம் | : | 67 பக்கங்கள் |
| விலை | : | 400/= |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே ...........


- ➢➢தையல் யந்திரத்தின் பாகங்களும் தொழில்களும்
- ➢➢தையல் யந்திரத்தை பாவிக்கும் முறை
- ➢➢தைக்கும் போது கவனிக்க வேண்டியவை
- ➢➢தையற்**கலைஞர்** தெரிந்திருக்க வேண்டியவை
- ➢➢தையலுக்கு தேவையான பொருட்கள்
- ➢➢தையல் வகைகளும் அவற்றின் பயன் பாடுகளும்
- ➢➢sleeveவகைகள்
- ➢➢கழுத்து வகைகள்
- ➢➢Collarவகைகள்
- ➢➢House coat
- ➢➢Aline frock
- ➢➢Princess line frock
- ➢➢ஆறு வெட்டுச் சட்டை
- ➢➢குடை வெட்டுச் சட்டை
- ➢➢Law waist frock
- ➢➢Babyகளுக்கான pantyவகைகள்
- ➢➢Bloomer panty
- ➢➢அடுக்குச் சுருக்குப் பாவாடை
- ➢➢Balloon skirt
- ➢➢Patiala
- ➢➢சுடிதார்and Pant
- ➢➢Saree underskirt(4துண்டு) ( i)
- ➢➢Saree underskirt (6துண்டு) ( ii)
- ➢➢Saree underskirt (iii)
- ➢➢Saree underskirt (iv)
- ➢➢Saree underskirt (v)
- ➢➢Bracut saree blouse(i)
- ➢➢Princess line saree blouse(ii)
- ➢➢Princess line bra cut saree blouse(iii)
- ➢➢Armcole cut saree blouse(iv)
- ➢➢Nighty
- ➢➢Baby pillow cover
- ➢➢Double bed cover
- ➢➢Single bed cover
- ➢➢Patch workதுணி இணைப்பு வேலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அளவுகளுக்கான சமன் பாடுகள்

உடம்பு அகலம்= ; $\frac{\text{மார்புச் சுற்றளவு}}{2}$

முன்குறுக்களவு = $\frac{\text{முன்நெஞ்சுக் குறுக்களவு}}{2}$

பின் குறுக்களவு = $\frac{\text{பின் நெஞ்சுக் குறுக்களவு}}{2}$

இடுப்பு அளவு = $\frac{\text{இடுப்புச்சுற்றளவு}}{2}$

அக்குள் அளவு = $\frac{\text{அக்குள் சுற்றளவு}}{2}$

Dart அளவு = $\frac{\text{dart இடைத்தூரம்}}{2}$

கை அளவு = $\frac{\text{கை சுற்றளவு}}{2}$

இடை அளவு = $\frac{\text{இடைச் சுற்றளவு}}{4}$

தோள் அளவு = $\frac{\text{தோள் நீளம்}}{2}$

## தையல் யந்திரத்தின் பாகங்களும் அவற்றின் தொழில்களும்

ஊசித்தண்டு(needle bar)
ஊசியை மேலும் கீழும் போய் வரச் செய்கிறது.
திருகாணி
துணி சீராகச் செல்ல உதவுகிறது
நகர்த்தும்பல் (feed dog)
துணியை முன் நகர்த்த உதவுகிறது
நூல் பாதுகாப்புக் கம்பி
ஊசியை பொருத்தும் இடத்திலுள்ளவளைவான பகுதி நூல் சிக்காமல் பாதுகாக்கிறது
ஊசி
இது பல எண்களைக் கொண்டது. தையலுக்கு முக்கியமானது 16-18 எண் ஊசி மிகவும் பிரபல்யமானது
பொபினில் நூல் சுற்றும் பகுதி
சமமாகவும் சீராகவும் பொபினில் நூல் சுற்ற உதவும் இதனைக் கொண்டு இறுக்கமாகவோ தளர்ச்சியாகவோ நூல் சுற்றலாம் .
ஊசி பிளேட் (needleplate)
அரைவட்டமான இது தூசி போகாமல் இருக்கவும் shuttle part ஐ மூடவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுகிறது

அழுத்தும் மிதியடி(presser foot)

பற்களின் மீது நகரும் துணியை கெட்டியாகப் பிடித்து துணி சுருங்காமல் பாதுகாக்கிறது.

சுழலும் சக்கரம்(balance wheel)

இயந்திரம் இயங்கவும் நிறுத்தவும் பயன்படுகிறது..இது சுழன்றால்தான் இயந்திரம் வேலை செய்யும்

பொபினும் கேசும்

பொபினில் ஒரே சீராக நூலைச்சுற்றி கேஸ் போட்டு shuttle part ல் இயந்திரத்தை இயக்கித் தைக்கலாம் .

நூற்பந்துக் கம்பம் (spool pin)

நூலை தாங்கிப்பிடிக்கிறது

தையல் ஒழுங்காக்கி(stich regulater)

தையலை பெரிது பெரிதாகதீர்மானிப்பது

ஊசி பூட்டும் பிடி(needle clamp)

ஊசியை இறுகப் பூட்ட உதவும்

இழுவிசைத் தட்டு(tensionplate)

நூலை இழுக்கவும் தளர்த்தவும் பிரதானமாக செயற்படும் தட்டு

Kusan plate

**ஐதயல் யந்திரத்தை பாவிக்கும் முறை**

தினமும் தையல் யந்திரத்தை துடைத்தல் வேண்டும்.

தினசரி தைப்பதனால் தினசரி இரவில் எண்ணெய் விட வேண்டும்.

தினசரி தைக்காதுவிட்டால் வாராந்தம் எண்ணெய் விட வேண்டும்

காற்று,தூசி படாது மூடிப் பாதுகாக்க வேண்டும் .

தைக்காத நேரத்தில் சப்பாத்தின் அடியில் துணி வைக்க வேண்டும் .

வாரம் ஒரு முறை அல்லது மாதம் ஒரு முறை சட்டின் பகுதியை கழட்டிச் சுத்தம் செய்ய வேண்டும்

வருடம் ஒரு முறை கட்டாயமாக எண்ணெய் பராமரிப்பு செய்ய வேண்டும்

தையல் யந்திரத்தை சமனான தரையில் வைத்துத் தைக்க வேண்டும் இதனால் பாகங்கள் அதிர்ச்சி அடையாது பாதுகாக்கப்படும்.

தைக்கத் தெரியாதவர்கள் யந்திரத்தில் தைக்க அனுமதிக்கக் கூடாது

தேய்ந்த பாகங்களை உடன் மாற்ற வேண்டும்

**தையல் யந்திரத்தில் அதிக சத்தம் உண்டாவது ஏன்?**

நீண்ட காலப் பாவனை இன்மை

oilதன்மை இல்லாமையால் துருப்பிடிப்பது

பொருத்தமற்ற எண்ணெய் வகைகளைப் பாவிப்பதால் பாகங்களில் தேய்வு ஏற்படுவதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊசி உதிரிப்பாகங்களிற் சரிவரப் பூட்டப்படாமையால்
இயந்திரம் செயற்படும் ஓட்டப்பாதையில் எங்காவது நூல் சிக்குதல்

தொடர்ந்து தையல் விழாமைக்கான காரணங்கள்
ஊசி சரிவரப் பூட்டப்படாமை
வளைந்த, நுனிக்கூர்மையற்ற, துணிக்குப் பெருத்தமற்ற ஊசிப்பாவனை
Carrierநல்ல நிலையில் இல்லாமை
சுழற்சியை ஏற்படுத்தும் பகுதி (shuttile driver) சீரின்றி வளைந்திருத்தல்
Shuttle பொருந்தும் பகுதி (carriar case) தேய்ந்திருத்தல் பழுதடைந்திருத்தல்.

**ஊசி உடைவதற்கான காரணங்கள்**

★ ஊசி சரிவரப் பெருந்தாவிடில்
★ துணிக்கேற்ற ஊசி பொருந்தாவிடில்
★ துணியை வெளியே எடுக்கும் போது ஊசியை மேல் உயர்த்தி சப்பாத்தை உயர்த்தி எடுக்காவிட்டால்
★ ஊசி கூரானதாகவும் ,நேரானதாகவும் இல்லாவிட்டால்
★ நூலை விடுவிக்கும் விசையானது (tension disk) அளவுக்கதிகமாக இருத்தல்.
★ Kusan plateஉடைந்த நிலையில் இருந்தால் shuttleஅதிர்வைக் குறைக்கும் பகுதி shuttledriverஉடைந்த நிலையில் இருந்தால்
★ ஊசி சரியான அளவுடன் பூட்டப்படாது விட்டால்

**நூல் அறுந்துபோகாமல் தைப்பதற்கு**

மேல்நூலும் கீழ் நூலும் ஒரே நூலாக இருக்கவேண்டும்
ஒழுங்காக நூல் சுற்றி பொபின் கேஸ் சரிவரப் பொருத்த வேண்டும்
துணியின் தன்மைக்குத் தக்கதாக tension disk ஐ சரிசெய்ய வேண்டும்
Balance wheelபின்பக்கம் சுற்றாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்
தடிப்பான இடங்களில் தைக்கும் போது சோப் அல்லது மெழுகு பூசித் தைக்க வேண்டும்
நூல் ஒழுங்காக கோர்க்க வேண்டும்
துணிக்கு ஏற்ற நூல் பயன் படுத்த வேண்டும்
Feed dogல் தூசி படியாமல் பார்க்க வேண்டும்

**தைக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை**

முதுகுப் புறத்தில் இருந்து வெளிச்சம் படுமாறு இருந்து தைக்க வேண்டும்
வெளிச்சம் உள்ள இடத்தில் இருந்து தைக்க வேண்டும்
துணிகளை வெட்டும் முன் மனம் திருப்திப் படுமாறு அளவுகளை சரிபார்த்துக் கொள்ள வேண்டும்
அளவெடுக்கும் போது சரியான அளவினை எடுத்துக் கொள்ள வேண்டும்
பருமனானவர்களுக்கு உடை வெட்டும் போது அளவுகளில் கூடிய கவனம் எடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணி வெட்டும் போது உறள் பக்கம் எப்போதும் மேலிருந்து கீழாக இருக்க வேண்டும். பருத்தி, பொலியஸ்டர், மல், பேபி (F) பிளனல் போன்ற துணிகளுக்கு உறள் பக்கம் கவனத்தில் கொள்ள வேண்டும். தவறின், கமக்கட்டு இடுப்பு பகுதிகளில் விரைவாக குறுக்குக் கிழிவு ஏற்படும்.

சலனமற்ற மனநிலையில் உடை வெட்டித் தைக்க வேண்டும்

**மேல் நூல் அறுவதற்கான காரணங்கள்**

தவறான நூல் கோர்க்கும் முறை
மேல் பாகங்கள்(நூல் வழி) இறுகியிருத்தல்
ஊசிக்கு ஏற்ற நூல் பாவிக்காமை
இழுவிசைத் தட்டில் (tension disk) வில்லில்லாது இருத்தல
ஊசி தவறாக பொருத்தப் படுதல்
நூலில் முடிச்சு இருத்தல்
நூல் பந்துக் கம்பத்தில் நூல் சிக்குப்படல்

**கீழ் நூல் அறுவதற்கான காரணங்கள்**

Bobbin casinஉள் நூல் சரியான முறையில் செலுத்தப்படாமை
Bobbin casilஇருந்து வரும் நூல் விசை அழுத்தம் அதிக விசையாக இருத்தல்
Feed dog (பல்)தள்ளிக் கொடுக்கும் துணியின் அளவு சரியாக இல்லாமை
Bobbin case, bobbin, carrierபோன்றவை நன்னிலையில் இல்லாமை
Bobbin case மூலம் வரும் நூலின் விசையும் ஊசி மூலம் வரும் நூலின் விசையும் சமனாக இல்லாதிருத்தல்

**தையல் நுணுக்கங்கள்**

**சாறிபிளவுஸ் :-**

★ தையல் வெளித் தெரியாமல் தைக்க வேண்டும்
★ bra cutting dartil கீழ்ப்பகுதிக்கான dart 2" அகலமும் (1+1) 3உயரமும், கமக்கட்டு dart 1/2" அகலமும் 5" நீளமும், open பகுதிக்கான dart 3" அகலமும் (1 1/2+1 1/2') 3நீளமும் உடையதாயின் நேர்த்தியான cutting அமையும்
★ liningblouse க்கு 30 நிமிடமும் சாதாரண blouse க்கு 40 நிமிடமும் போதுமானது
★ பின் பகுதியின் அளவில் இருந்து முன் பகுதியை open பகுதியில் 1 குறைத்து வெட்ட வேண்டும்
★ கழுத்தை பெரிதாக வெட்டி விட்டால் பின்னல் வேலை, லேஸ் என்பன கொண்டு சரிப்படுத்தலாம்
★ princess cut blouse க்கு cup வைத்தால் எடுப்பாக இருக்கும்
★ bra cut yoke ற்கு paperstiff அல்லது sponge வைத்து தைக்க அழகாய் இருக்கும்
★ back open ஆக இருப்பின், huge நெருக்கமாக தைக்க வேண்டும்
★ கழுத்து வடிவங்கள் சீராக இருக்க வேண்டும்
★ கழுத்து வடிவங்களை துணியில் வெட்டி கழுத்தை தைப்பது அதிக நேர்த்தியாகும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாவாடை :-**

★ குடைவெட்டுப் பாவாடையாக இருந்தால் அளவு நாடாவால் அளந்து குறித்து வெட்ட வேண்டும்

★ 2துண்டு, 4துண்டு, 6துண்டு, 8துண்டு பாவாடைகளுக்கு நடுப்பகுதியின் அளவாக ஏனைய துண்டுகளின் பக்கங்களை வெட்ட வேண்டும்

★ இடுப்பின் அளவில் பட்டி வெட்டித் தைக்க வேண்டும். கூடுதலாக இருப்பின் அணிவதற்கு சிரமமும் மனக்குழப்பமும் ஏற்படும்

**பள்ளிச் சீருடை :-**

★ பெரியவர்களுக்கான சீருடையின; dart 1'' அகலமும் 6'' or 7'' நீளமாயும், சிறியவர்களுக்கான சீருடையின் dart 1'' அகலமும் 5 நீளமாயும் இருத்தல் வேண்டும்.

★ collor இணைக்கும் போது கழுத்தின் அளவுக்கு அளந்து வெட்டி ஒரு பகுதியை, சட்டையோடு இணைத்து மறு பகுதியை மூடித் தைக்க வேண்டும்.

★ belt இடுப்பை விட 2'' or 3'' கூடுதலாக இருந்தால் போதுமானது.

★ கீழ் மடிப்பு 2 குறையாது இருக்க வேண்டும்.

★ பாடசாலை விதிமுறையை மீறி தைக்கக்கூடாது.

★ Openபகுதிக்கு தையல் இடுவது தவிர்க்கப் பட வேண்டும்.

★ சுருக்குகள் ஒரே அளவாக இருக்க வேண்டும். இடுப்பை அகலமாக்காது சரியான அளவில் வெட்டித் தைக்க வேண்டும். தவறின் belt க்கு pin பண்ணியதும் சுருக்கம் விழும்.

**சேட் :-**

★ இடதுபக்கம் பட்டின் தைக்க வேண்டும்.

**சட்டை:-**

★ இடுப்பு வெட்டித் தைக்கும் சட்டை ஆயின் மேல் சட்டையின் இரு ஓரங்களையும் 1கிடையாக உள்நோக்கி வெட்ட வேண்டும்.

★ A line , nighty, pricess line, சட்டைகளுக்கும் இருபக்க ஓரங்களுக்கும் உள்நோக்கி 2வளைவாக வெட்ட வேண்டும்.

★ இடுப்பு வெட்டும் சட்டையாயின் கீழ்ப்பக்க மேல் பக்க dart கள் சமனாய் இருக்க வேண்டும்.

★ பட்டின்கள் தைக்கும் போது நிதானமாக தைக்க வேண்டும் தவறின், சுருக்கம் விழும் (இடது பக்கம் )

★ Cross pieceதைக்கும் போது சற்று இழுத்துத் தைக்க வேண்டும்.

★ Simokingதைக்கும் போது 3 மடங்கு துணியை சுருக்குதல் வேண்டும்.

**தைக்கும் போது அடிக்கடி நூல் அறுதல்**

★ மேல் நூல் (ஊசி மூலம்) விடுவிக்கும் விசையானது (tension disk) அதிக விசையுடன் இருப்பதால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமற்ற ஊசியாக இருத்தல்

★ ஊசி கீழ் நோக்கிச் செல்லும் போது presser foot, needle plate போன்ற பாகங்களுடன் உராய்வதால் தைக்கும் போது நூலை விடுவித்துக் கொடுக்கும் நெம்பு கோல் (take up lever) உயர்ந்த நிலையில் இருக்காமை

★ Bobin , bobin case, Carrierஎன்பன சீரற்று இருத்தல்

**சுழற்சியின் போது கடினமாய் இருந்தால்**

எல்லாப் பகுதிகளுக்கும் dust எடுத்த பின் oil விட வேண்டும்

பாகங்களில் நூல் சிக்குண்டு உள்ளதா எனப் பார்த்தல்

shuttle driver க்கும் carrier க்கும் இடையே சரியான இடைவெளி உள்ளதா எனப் பார்த்தல்

எல்லாப் பாகங்களும் சரியாகப் பொருத்தப் பட்டுள்ளதா எனப் பார்த்தல்

உதிரிப்பாகங்களில் வளைவு, உடைவு இல்லாது பாதுகாக்க வேண்டும்

**தையலில் சுருக்கு விழுதல்**

feed dog(பல் ) அளவான உயரத்தில் இருத்தல் வேண்டும்

presser foot(அமர்த்தும் பாதம் )துணியின் தன்மைக்கேற்ப அழுத்தம் வேண்டும்

ஊசி கூராக இருத்தல் வேண்டும்

ஊசி நுழையும் தகட்டில் வெடிப்போ காயங்களோ இல்லாது இருத்தல் வேண்டும்

**துணியை சரியான அளவுக்கு தள்ளிக் கொடுக்கா விட்டால் செய்ய வேண்டியவை**

பல் கீழே இறங்கியிராது துணியின் தன்மைக்கேற்ப சரியான அளவில் இருக்க வேண்டும்

தையலை பெரிது சிறிதாக்கும் பகுதி (stich regulater) உரிய இடத்தில் இருக்கவேண்டும்

presser foot(அமர்த்தும் பாதம் )உயரமாக இருக்கக் கூடாது

presser footதுணியின் தன்மைக்கேற்ப இருக்க வேண்டும்

பல் தேய்ந்திருக்கக் கூடாது

தையற்கலைஞர்கள் தெரிந்திருக்க வேண்டியவை

துணியின் வகைகள் உற்பத்தி என்பன

துணி எதிலிருந்து எவ்வாறு தயாரிக்கப் படுகிறது என்பன

துணியின் நீள அகலங்களை தேர்ந்தெடுக்கும் முறைகள்

யாருக்கு எவ்வாறான துணிகள் பொருந்தும் என்பது

**துணிகள் ஆடைகளை தெரிவு செய்யும் போது**

உயரமான மெல்லிய தோற்றம் உடையவர்கள் பெரிய கட்டம் பெரிய வட்டங்கள் பெரிய பூக்கள், கிடையான கோடுகள் போட்ட துணிகளை தெரிவு செய்ய வேண்டும்.

உயரம் குறைந்தவர்களுக்கு சிறு பூக்கள், சிறு வட்டங்கள், சிறு சதுரங்கள், மேலிருந்து கீழான கோடுகள் போட்ட துணிகளை தெரிவு செய்ய வேண்டும்.

உடலின் நிறத்திற்கேற்ப கருமையானவர்கள் மெல்லிய நிறத்திலும் வெண்மையான வர்கள் மெல்லிய கடுமையான நிறங்களிலும் ஆடைகளை தெரிவு செய்யலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பணிபுரிபவர்களுக்கு எளிதான மெல்லிய நிறத்திலான ஆடைகளை தெரிவு செய்ய வேண்டும்

★ சிறுவர்களுக்கு சிறுபொம்மைகள், சிறு பூக்கள் போட்ட துணிகளான ஆடைகள் சிறந்தது

★ வயதானவர்களுக்கும் நோய்வாய்ப் பட்டவர்களுக்கும் பருத்தி ஆடைகளே சிறந்தது.

தலையணை உறை, இரவங்கி, உட்பாவாடை, படுக்கை விரிப்பு என்பவற்றுக்கு பருத்தியிலான ஆடைகள் நன்று.

★ கொண்டாட்டங்களின் வகைக்கேற்பவும், வருவாய்க்கேற்பவும் ஆடைத் தெரிவு அமைய வேண்டும்.

★ உடல் பருமனானவர்கள் நீண்ட top அணிய வேண்டும், மெல்லியவர்கள் உடல் வாகுக்கு ஏற்ப அதிக வேலைப்பாடுகள் கொண்ட சிறிய top அணிய வேண்டும்.

**தையலுக்கு தேவையான பொருட்கள்**

1. அளவுநாடா
2. அடிமட்டம்

**பதிக்கும் உபகரணங்கள் :-**

3. பென்சில் கபில நிறத்தால் (brown paper) காபன்தாள் (carbon) குண்டூசி (pins) சுவடுவரை சில்லு (tracing wheel)குறியிடும் சுண்ணக்கட்டி (marking chalk)
4. ஒளியூடு பரவும் கடதாசி(tissue paper or oil paper)
5. கத்தரிக்கோல்
6. ஊசி
7. நூல்
8. விரலுறை(தீதாள்)
9. சட்டம; (frame)
10. தையல் யந்திரம்
11. அளவுநாடா :- துணிகளைஅளவெடுக்கவும், உடலில் அளவெடுக்கவும் பயன்படும்.
12. அடிமட்டம் :- மாதிரியுரு தயாரிக்க அளவு குறிக்கப் பயன்படும்.
13. பென்சில் :- உருக்களை கீறுவதற்குப் பயன்படும்
14. கபில நிறத்தாள் :- மாதிரியுருக்கள் தயாரிக்க
15. காபன் தாள் :- மலர்கள் பழங்கள் என வடிவங்கள் துணியில் பதிக்க
16. குண்டூசி :- துணிகள் அசையாமல் உறுதியாக வைத்துக்கொள்ள மாதிரியுருவை துணியில் வெட்ட கழுத்துடன் கழுத்துப் பட்டியுடன் இணைக்க மேற்சட்டையுடன் பாவாடையை இணைக்க
17. சுவடு வரை சில்லு :- மாதிரியுருவை துணியின்மீது வைத்து தைக்க வேண்டிய கோடுகளை பதிக்க இது பயன்படும் தையலுக்கு மிக மிக முக்கியமானதும் மிக இலகுவாகப் பதிவு செய்யக் கூடியதுமாகும். காபன் கடதாசியைக் கொண்டு சுவடுவரை சில்லு துணியில் இடும் அடையாளம் முறைசார்ந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. சுண்ணக்கட்டி :- காபன்தாள் போன்று அடையாளமிட பயன்படும் காபன்தாள் இன்றி சுண்ணக்கட்டியால் துணியில் அடையாளம் இடலாம்

19. கத்தரிக்கோல் :- துணியை வெட்ட, கடதாசியில் மாதிரியுரு வெட்ட, தைக்கும் போது நூல் வெட்ட பயன்படும். துணியை வெட்ட நீண்ட அலகுள்ள கத்தரிக் கோலும், ஓரம் பல் போன்ற வடிவில் வெட்ட பற்கத்தரிக்கோலும், கடதாசி வெட்ட நுணிக்கூர்மை அற்ற கத்தரிக் கோலும் பாவிக்கலாம்.

20. ஊசி :- கையில் தைக்கும் ஊசி, மெசின் தையல் ஊசி இரண்டும் தையலுக்கு தேவையானது. மெல்லிய துணிக்கு மெல்லிய ஊசியையும், தடிப்பான துணிக்கு பெரிய ஊசியையும் பயன்படுத்த வேண்டும். Embroidery தேவைக்கு மெல்லிய ஊசியைப் பயன்படுத்த வேண்டும்.

நூல் :- தையலுக்கு மிகவும் முக்கியமானது.

விரலுறை :- தைக்கும்போது நடுவிரலுக்கு அணியப்படும். உறையாகும். கைத்தையல்களுக்கு கட்டாயம் அணியவேண்டும். தையலின்போது விரல் ஊசியால் குத்துப்படுவதை தடுக்கும்.

சட்டம் :- அலங்காத் தையல் தைக்கும்போது துணியில் பொருத்தி தைக்கப்படும். துணி சுருங்காமல் இருக்க உதவும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா வரைபுகளுக்கும் அளவுகள்
பொதுவாக உதாரணப் படுத்தப்பட்டு சமன்பாடுகள் தரப்பட்டுள்ளன.
அவரவர் தமது அளவுகளைப் பயன்படுத்தவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# House Coat

அளவுகள்

| | |
|---|---|
| முழு உயரம் | 45+ 1/2 |
| மார்புச் சுற்றளவு | 34÷4= 8 1/2 (I) |
| | 8 1/2 +2 = 10 1/2 (II) |
| கழுத்துச் சுற்றளவு | 14 ÷ 4 = 3 1/2 (1) |
| | 3 1/2 - 1/2 = 3 (1) |
| தோள் பட்டை | 15÷2 = 7 1/2 + 1/2 = 8 |

AB கழுத்துச் சுற்றளவு 3 (1)

AE கழுத்துச் சுற்றளவு (II) 3 1/2

BC தோள் பட்டை அளவு

CC தோள் சரிவு

EF 2 1/2 "

AO முழு உயரம்

BCEDD என்பன Yoke

தோளிலிருந்து மார்பு நடுப்புள்ளியை மத்தியாகக் கொண்டு கமக்கட்டு வளைவில் 2 1/2 முன்னோக்கி வளைவாக வெட்டப்பட்டுள்ளது.

E,E,F,O,F, என்பன Yoke இன் கீழ்ப்பகுதி

RESO சுருக்குவதற்காக 5 " கூட்டப்பட்டுள்ளது.

தைக்கும் முறை

yoke உடன் கீழ்ப்பகுதியை சுருக்கி பொருத்தவும்.

முன்பின் தோளைப் பொருத்தவும்

கையைப் பொருத்தவும்

கையிலிருந்து Side ஐ தைக்கவும்


கழுத்தைத் தைக்கவும்


கீழ்மடிப்பு இடவும்


Note: yoke இற்கு less தைக்கலாம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறு வெட்டுச் சட்டை

அளவுகள்

| | |
|---|---|
| முழு உயரம் | 36” |
| தோளிலிருந்து இடுப்புவரை | 15” } முழு உயரம் |
| இடுப்பிலிருந்து கீழ்வரை | 21” } |
| மார்புச் சுற்றளவு | 32 ÷ 4 = 8 (I) |
| | 8” + 2 = 10 (II) |
| கழுத்துச் சுற்றளவு | 14 ÷4 , 3 1/2 (I) |
| | 3 1/2-1/2 = 3 II |
| தோளிலிருந்து மார்புவரை | 8 1/2 + 1/2 = 9 |
| தோளிலிருந்து இடுப்புவரை | 15 +1/2 + 1/2 = 16 |
| இடுப்புச் சுற்றளவு | 28÷4= 7 1/2+1 1/2 = 9 |
| Dart | 7+1 1/2 = 8 1/2 / 2 = 4 1/4 |
| கீழ் உயரம் | 21+ 1/2+1=22 1/2 |
| தோள் சரிவு | 1” |

உள்நோக்கிய கமக்கட்டு வளைவு 1/2”

தைக்கும் முறை :


1. Dart களை தைக்கவும்
2. கழுத்துக்கு Piping or crosspiece or Collor வைத்துத் தைக்கவும்.
3. தோள் முன்பின் பகுதிகளை பொருத்தவும்
4. கையைப் பொருத்தவும்
5. கீழ்ப்பகுதிக்கான 6 துண்டுகளை ஒன்றுடன் ஒன்று பொருத்தவும்.
6. கீழ்ப்பகுதியை மேல் பகுதியுடன் பொருத்தவும்.
7. கையிலிருந்து தொடங்கி Side பொருத்தவும்.
8. கீழ்ப்பகுதிக்கு hem போடவும்


Note : மேல் பகுதியின் முன் பகுதியை வைத்து பின்பகுதியை வெட்டவும்.


- கீழ்ப்பகுதியை இரண்டாக மடித்து பின் நான்காக மடித்து, பின்
- குறுக்காக மடித்து 6 துண்டாக வெட்டவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடை வெட்டுச் சட்டை

அளவுகள்

| | |
|---|---|
| முழு உயரம் | 36 |
| தோளிலிருந்து இடுப்புவரை | 15 } முழு உயரம் |
| இடுப்பிலிருந்து கீழ்வரை | 21 } |
| மார்புச் சுற்றளவு | 32÷ 4 = 8 (I) |
| | 8 + 2 = 10 (II) |
| கழுத்துச் சுற்றளவு | 14÷4 , 3 1/2 (I) |
| | 3 1/2-1/2 = 3 II |
| தோளிலிருந்து மார்புவரை | 8 1/2 + 1/2 = 9 |
| தோளிலிருந்து இடுப்புவரை | 15 +1/2 + 1/2 = 16 |
| இடுப்புச் சுற்றளவு | 28÷4= 7 1/2+1 1/2 = 9 |
| Dart | 7+1 1/2 = 8 1/2 ÷ 2 = 4 1/4 |
| கீழ் உயரம் | 21+ 1/2+1=22 1/2 |
| தோள் சரிவு | 1" |
| உள்நோக்கிய கமக்கட்டுவளைவு | 1/2" |


தைக்கும் முறை :


1. Dart தைக்கவும்.
2. தோள் முன்பின் பகுதிகளை பொருத்தவும்
3. கையைப் பொருத்தவும்
4. கீழ்ப்பகுதிக்கான குடைவெட்டை மேற்பகுதியுடன் பொருத்தவும்.
5. கையிலிருந்து தொடங்கி இடுப்புவரையான Side ஐ பொருத்தவும்.
6. கழுத்தை தைக்கவும்
7. கீழ்ப்பதிக்கு சிறிய hem போடவும்

Note : மேல் பகுதிக்கு முன்பகுதியை வைத்து பின்பகுதியை வெட்டவும். கீழ்ப்பகுதியை இரண்டாக மடித்து பின் குறுக்காக மடித்து அளவு நாடாவால் இடுப்புச்சுற்றளவு, கீழ்ப்பகுதி என்பன அளந்து வெட்டவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Low waist frock (Princess Cut)

அளவுகள்

| | |
|---|---|
| முழு உயரம் | 36 +1/2 +1 = 37 1/2 |
| மார்புச் சுற்றளவு | 32 ÷ 4 = 8 (I) |
| | 8 + 2 = 10 (II) |
| கழுத்துச் சுற்றளவு | 14÷4 , 3 1/2 (I) |
| | 3 1/2-1/2 = 3 II |
| தோள்பட்டை அளவு | 14 ÷ 2 = 7 + 1/2 = 7 1/2 |
| தோளிலிருந்து மார்புவரை | 8 + 1/2 = 8 1/2 |
| தோளிலிருந்து இடுப்புவரை | 14 +1/2 = 14 1/2 |
| Princes Cut | கமக்கட்டு → மார்பு நடுப்புள்ளி → கீழ்வரை |
| இடைச் சுற்றளவு | 34 ÷ 4 = 8 1/2 + 1/2 = 9 |
| தோளிலிருந்து இடைவரை | 17 + 1/2 + 1/2 = 18 |
| இடையிலிருந்து கீழ்வரை | 19 + 1/2 + 1/2 = 20 |

★ Princes Line ஐ தைக்கவும்.

★ தோள் முன் பின் பகுதிகளை பொருத்தவும்

★ கையைப் பொருத்தவும்.

★ கையிலிருந்து Side ஐ தைக்கவும்

★ கீழ்ப்பகுதியை மேற்பகுதியுடன் பொருத்தவும்.


★ கழுத்தை தைக்கவும்

★ கீழ்ப்பகுதிக்கு hem போடவும்

Note : இடுப்பளவின் இருமடங்கு துணியை சுருக்கியும் தைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Line frock

அளவுகள்

| | |
|---|---|
| முழு உயரம் | 36 +1/2 +1 = 37 1/2 |
| மார்புச் சுற்றளவு | 32 ÷ 4 = 8 (I) |
| | 8 + 2 = 10 (II) |
| கழுத்துச் சுற்றளவு | 14÷4 , 3 1/2 (I) |
| | 3 1/2-1/2 = 3 II |
| தோள்பட்டை அளவு | 14 ÷ 2 = 7 + 1/2 = 7 1/2 |
| தோளிலிருந்து மார்புவரை | 8 + 1/2 = 8 1/2 |
| தோளிலிருந்து இடுப்புவரை | 14 +1/2 = 14 1/2 |
| Dart | 8 1/2 + 1 1/2 = 10 / 2 = 5 |
| இடுப்புச் சுற்றளவு | 26 ÷ 4 = 6 1/2 + 1/2 + 1/2 =8 1/2 |
| தோளிலிருந்து இடைவரை | 17 + 1/2 + 1/2 = 18 |
| இடையிலிருந்து கீழ்வரை | 19 + 1/2 + 1/2 = 20 |

Dartஎடுக்கும் முறை இடுப்புச் சுற்றளவை பிரித்து வரும் அளவுடன் 1 1/2 ஐ கூட்டி 2 ஆல் பிரிக்கவும்

| | |
|---|---|
| இடைச் சுற்றளவு | 34 ÷ 4 = 8 1/2 + 1/2 =9 |


தைக்கும் முறை:

- ★ முன்பின் Dart ளை தைக்கவும்.
- ★ தோள் முன் பின் பகுதிகளை பொருத்தவும்
- ★ கையைப் பொருத்தவும்.
- ★ கழுத்தை தைக்கவும்
- ★ கையிலிருந்து தொடங்கி Side வரை தைக்கவும்
- ★ கீழ்ப்பகுதிக்கு hem போடவும்

Note : கீழ் அகலத்தை விருப்பம் போல் கூட்டலாம், குறைக்கலாம்.
Full Sleeve தைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Princess Line frock

அளவுகள்

| | |
|---|---|
| முழு உயரம் | 36 +1/2 +1 = 37 1/2 |
| மார்புச் சுற்றளவு | 32÷ 4 = 8 (I) |
| | 8 + 2 = 10 (II) |
| கழுத்துச் சுற்றளவு | 14÷4 , 3 1/2 (I) |
| | 3 1/2-1/2 = 3 II |
| தோள்பட்டை அளவு | 14 ÷ 2 = 7 + 1/2 = 7 1/2 |
| தோளிலிருந்து மார்புவரை | 8 + 1/2 = 8 1/2 |
| தோளிலிருந்து இடுப்புவரை | 14 +1/2 = 14 1/2 |
| இடுப்புச் சுற்றளவு | 26 ÷ 4 = 6 1/2 + 1/2 + 1/2 =8 1/2 |
| இடைச் சுற்றளவு | 34 ÷ 4 = 8 1/2 + 1/2 =9 |

Dart 7 1/2 + 1 1/2 = 9 ÷ 2 = 4 1/2

தைக்கும் முறை:

Princess Cut ஐ தைக்கவும்.

தோள் முன் பின் பகுதிகளை இணைக்கவும்

கையை தைக்கவும்

கழுத்தை தைக்கவும்

கையிலிருந்து Side தைக்கவும்


கீழ்ப்பகுதிக்கு hem போடவும்

Note : கீழ்ப்பகுதியை அகலமாக வெட்டினால் Flaiad ஆக அழகாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# collarவகைகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கை அளவுகளும் வரைபடமும்

அளவுகள்


கை உயரம்

கை தடித்த பகுதியின் சுற்றளவு

தோள்பட்டையிலிருந்து 2 1/2 கீழ்நோக்கி

கமக்கட்டுச் சுற்றளவு


கை கீழ்பக்க சுற்றளவு







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# Sleeve வகைகள்





Cup I Paper Stiffi ல் வெட்டி பின் இரண்டாக மடித்து துணியில் வைத்து Iron செய்தபின் தைக்கவும்



Puff Sleeve




Gowl Sleeve




Normal Sleeve




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Cross over sleeve



Long bell sleeve



Long sleeve

* Normal sleeveசாறிபிளவுஸ் சாதாரண சட்டைகளுக்குப் பயன்படும்.

* Full sleeve சேட்களுக்கும் பெண்களின் Modern சட்டைகளுக்கும்

* Puff sleeveசிறுமிகளின் சட்டை, சாறி பிளவுஸ்களுக்கும் பயன்படும்.

* Gowl sleeveசிறுமிகளுக்கும் பெண்களின் சட்டைகளுக்கும் பயன்படும்.


* Cross over sleeveபெண்களின் சட்டைகள் சாறி பிளவுஸ் என்பனவற்றுக்கு பயன்படும்.

* Long bell sleeve சிறுமிகளின், பருவப் பெண்களின் (Modern) சட்டைகளுக்கு பயன்படும்.

* Long sleeve top சுடிதார் Princess line frock என்பனவற்றுக்கு பயன்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Baby களுக்கான Panty வகைகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Bloomer Panty

| | | | |
|---|---|---|---|
| அளவுகள் :- | முழு உயரம் | 10+14 | |
| | இடுப்புச் சுற்றளவு | $\frac{20 + 10}{4}$ | $= \frac{30}{4} = 7\ 1/2$ |
| | கீழ் நீளம் | 6 | |
| | கால் சுற்றளவு | $\frac{20+10}{4} = 30$ | $= 7\ 1/2 + 1\ 1/2$ or $2 =$ 9 or 9 1/2 |

கால்பகுதியை மடிப்பு போட்டு எலாஸ்ரிக் போடவும்.





2 கால்களாக இணைத்து நடுப்பகுதியினூடாக இணைக்கவும்.

மேல்பகுதிக்கு இணைப்பு போட்டு எலாஸ்ரிக் போடவும்.

இவ்வாறே நீளமாக Pottom தைக்கலாம்.

கீழ்க்கால் சுற்றளவு குறைக்க வேண்டும்.


Note எலாஸ்ரிக் போடாது Elastic Thread பாவித்தால் மேலும் அழகாய் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடிதார்and Pant






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுடிதார்and pant

சுடிதார் அளவு :-

| | |
|---|---|
| முழு உயரம் | 36 +1/2 +1 = 37 1/2 |
| மார்புச் சுற்றளவு | 32 ÷ 4 = 8 (I) |
| | 8 + 2 = 10 (II) |
| கழுத்துச் சுற்றளவு | 14÷4 , 3 1/2 (I) |
| | 3 1/2-1/2 = 3 II |
| தோள்பட்டை அளவு | 14 ÷ 2 = 7 + 1/2 = 7 1/2 |
| இடுப்புச் சுற்றளவு | 26 ÷4 = 6 1/2 + 1/2 + 1/2 =8 1/2 |
| இடைச் சுற்றளவு | 34 ÷ 4 = 8 1/2 + 1/2 =9 |

தைக்கும் முறை:

- ★ முன் பின் தோள் பகுதிகளை இணைக்கவும்.
- ★ கையை இணைக்கவும்
- ★ கையிலிருந்து இடை வரை ( Open ) தைக்கவும்.
- ★ Open மடித்துதைக்கவும்.
- ★ கழுத்து தைக்கவும்.
- ★ கீழ்ப்பகுதிக்கு சிறிய hem போடவும்.

| Pant : | | |
|---|---|---|
| | முழு உயரம் | 38+1+11/2 = 40 1/2 |
| | இடுப்புச் சுற்றளவு | 30/4 = 7 1/2 +2 = 9 1/2 |
| | நடு உயரம் | 13 |
| | கால் சுற்றளவு | 12/2 = 6+1=7 |

தைக்கும் முறை:


கீழ் கால்பகுதிக்கு hem போடவும்.

கீழிருந்து மேல்நோக்கி தைக்கவும்.

2 கால்களையும் நடுப்பகுதியுடன் இணைக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Saree underskirt (1)

அளவுகள் :-

| | | |
|---|---|---|
| | முழு நீளம் இடுப்பிலிருந்து கால்வரை Band ஐ கழிக்கவும் | |
| | இடுப்புச் சுற்றளவு | 40 ÷ 4 + 1 + 1 = 12 |
| Band | இடுப்புச் சுற்றளவு | 40 ÷ 4 + 1 = 11 |
| | அகலம் | 2" |

தைக்கும் முறை:


- ★ Dart களை தைக்கவும்.
- ★ பாவாடைக்கான 4 துணிகளையும் ஒன்றுடன் ஒன்று பொருத்தவும்.
- ★ கீழ்ப்பகுதியை Band உடன் இணைக்கவும்.
- ★ கீழ்ப்பகுதிக்கு Less or frill வைக்கவும்.

Note: துணியை இரண்டாக மடித்து மீண்டும் குறுக்காக மடித்து 4 ஆக வெட்டவும்.

frill இற்கு 1 1/2", Band இற்கு 2 '' (1 1/2+2 = 3 1/2) கழித்து பாவாடைக்கான துணியின் நீளத்தை எடுக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Saree underskirt (II)

அளவுகள் :-

| | | |
|---|---|---|
| | முழு நீளம் இடுப்பிலிருந்து கால்வரை | |
| | இடுப்புச் சுற்றளவு | 36 ÷ 6 + 1 = 7 |
| Band | இடுப்புச் சுற்றளவு | 36 + 1 = 37 |
| | அகலம் | 2” |

தைக்கும் முறை:

6 துண்டுகளையும் ஒன்றுடன் ஒன்று பொருத்தவும்.

Band உடன் இணைக்கவும்.


கீழ்ப்பகுதிக்கு Less or prill தைக்கவும்.

Note: துணியை 4 ஆக மடித்து மீண்டும் குறுக்காக மடித்து 6 ஆக வெட்டவும்.

Prill இற்கு 1 1/2”, Band இற்கு 2” ( 1 1/2+2 = 3 1/2 ) கழித்து பாவாடைக்கான நீளத்தை எடுக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Saree underskirt (III)

அளவுகள் :-

Yoke 5" அடிப்படை அளவு

Yoke

இடுப்புச் சுற்றளவு 40" ÷ 4 + 1

இடுப்புச் சுற்றளவு 44"÷ 4 + 1

பாவாடையின் முழு நீளம் 36 - 5 = 31

முழுநீளத்திலிருந்து Yokeஐ கழிக்கவும்

தைக்கும் முறை:

Yoke இன் முன் பின் பகுதிகளுக்கு Dart தைக்கவும்.

York தடிப்பாக இருக்க வேண்டும். Double

துணியாகவோ or Gum Stiff ஒட்டியோ தைக்கவேண்டும்.

முன்பகுதியை pleat வைத்து Yoke உடன் இணைக்கவும்.

Note : Yoke முன்பகுதி நீளம் 7 ஆகவும் பின்பகுதி நீளம் 4 ஆகவும் வெட்டவும்.

பாவாடையின் பின்பகுதியை சுருக்கியும் முன்பகுதியைBox pleat ஆகவும் தைக்கவும்

கீழ்ப்பகுதிக்கு Less தைக்கவும்.


பின்பக்க Yoke ஐ வைத்து கீழ்ப்பகுதியை அப்படியே வெட்டினால் சுருக்கின்றி தைக்கலாம்.


முன்பகுதி Yoke ஐ வைத்து கீழ்ப்பகுதியை வெட்டும்போது முன்னோக்கி வெட்டவேண்டும். ( Pleat )

Open க்கு Zipவைத்து தைக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Saree underskirt (IV)

அளவுகள் :-

Yoke நீளம் முன் பின் 5”

இடுப்புச் சுற்றளவு $40 \div 4 + 1 = 11$

இடுப்புச் சுற்றளவு 44/ 4 + 1 = 12

பாவாடையின் முழு நீளம் சமன் 36 - 5 = 31

முழு நீளத்திலிருந்து Zip ஐ கழிக்கவும்

தைக்கும் முறை:

Yoke இன் முன் பின் பகுதிகளுக்கு Dart தைக்கவும்.

York இற்குDouble துணி or Gum Stiff ஒட்டவும்.

முன் York உடனும் பின் York உடனும் கீழ்ப்பகுதிகளை இணைக்கவும்.

Open இற்கு Zip தைக்கவும்.

Side பகுதிகளை இணைக்கவும்.

கீழ்ப்பகுதிக்கு Less தைக்கவும்.


Note : Yoke முன்பகுதி நீளம் 5” ஆக வெட்டவும்.


கீழ்ப்பகுதியை Yoke ஐ கழித்து எடுத்து இரண்டாக மடித்து பின் குறுக்காக 4 துண்டாக வெட்டவும்.

Dart 1” அகலமும் 3 1/2” or 4” நீளமும் ஆக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Saree underskirt (V)

அளவுகள் :-

| | |
|---|---|
| நீளம் | 36 |
| இடுப்புச் சுற்றளவு | 40 ÷ 6 + 1 |


தைக்கும் முறை:

- ★ 6 துண்டுகளையும் ஒன்றுடன் ஒன்று பொருத்தவும்.
- ★ Band ஐ இணைக்கவும்
- ★ கீழ்ப்பகுதிக்கு Less or Prill தைக்கவும்.
- ★ ஒவ்வொரு துணியின் (6) கீழ்ப்பகுதியிலும் பூக்கள் கையாலோor
- ★ மெசினாலோ Embroidery செய்யவும்.

Note : பொதுவான் அளவுடைய underskirt இது.
கல்யாண புடைவைகளுக்கு ஏற்றது.
No - 01 Cottonதுணிகளில் தைப்பது சிறந்தது.
Prill இற்கு Zigzag செய்வது அழகானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Patiala

அளவுகள் :-

| | |
|---|---|
| முழு உயரம் | 38 |
| இடுப்புச் சுற்றளவு | 30 + 10 =40 |
| நடு உயரம் (keel) | 13 |
| கால் சுற்றளவு | 12+3 |

உயரம் 38 = 8 Band

30 கீழ்ப்பகுதி

Band உயரம் 8 + 1/2 + 1 1/2 = 10

நடு உயரம்13 - 8 = 5 + 1/2 = 5 1/2

நடு உயரம் = Band / கீழ்ப்பகுதி

Band - Side I 6 or 5 ஆகவும் நடுப்பக்கத்தை 8 ஆகவும் வெட்டவும்.

தைக்கும் முறை:

- ★ கீழ்ப்பகுதியின் இடுப்புப்பகுதியை பட்டியின் (Band) அளவுக்கேற்ப சுருக்கம் (Plead) வைத்து தைக்கவும்.
- ★ காற்பகுதியை கால் சுற்றளவுக்கு ஏற்ப Plead வைத்து தைக்கவும்.
- ★ காற்பகுதிக்கு 1" or 1 1/2" அகலமான Band வைத்துத் தைக்கவும்.
- ★ கீழ் இருந்து மேல் வரை தைத்து கீழ் பகுதியை இணைக்கவும்.
- ★ Band உடன் இணைக்கவும்.

Note:

துணியை 2 ஆக மடித்து மீண்டும் முக்கோணமாக மடித்து வெட்டவும்

Band ஐ Side இல் இருந்து நடுவரை வளைவாக வெட்டவும்.

அதே போல் இடுப்புப் பகுதியையும் வளைவாக வெட்டி சுருக்கு வைக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Double Bed Cover

அளவுகள் :-

70" நீளமும் 48" அகல அளவுடைய 2 துணிகள்

180" நீளமும் 4" அளலம் அளவுடைய 1 துணி

56" அகலம் அளவுடைய 1 Zip

56" நீளமும் 2" அகலமும் அளவுடைய 2 துணிகள்

தைக்கும் முறை:

56" நீளமுடைய 2 துணிகள் நடுவே Zip தைக்கவும்.

120" நீளமான துணியுடன் Zip துணியை சதுரமாக பொருத்தவும்.

70" நீளமுடைய ஒரு துணியுடன் Zip துணியை ஒரு பக்கம் பொருத்தவும்.

Zip ஐ Open பண்ணவும். மறுபக்கம் துணியை திருப்பவும்.

70" நீளமான மறுதுணியை Zip துணியின் மறுபக்கம் பொருத்தவும்.

Note:

தையல் இடைவெளி விடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Single Bed Cover

அளவுகள் :-

70" நீளமும் 36" அகலமும் உடைய 2 துணிகள்

168" நீளமும் 4" அளலமுமான 1 துணி

44" நீளமும் 2" அகலமுமான 2 துணிகள்

44" அளவுடைய 1 Zip

தைக்கும் முறை:

44" நீளமான இரு துணிகளையும் இணைத்து Zip தைக்கவும்.

168" நீளமான துணியுடன் Zip தைத்த துணியை நீள்சதுரமாக பொருத்தவும்.

70" நீளமான ஒரு துணியுடன் Zip தைத்த துணியுடன் ஒரு பக்கம் பொருத்தவும்.

மறுபக்கம் திருப்பி Zip ஐ கழட்டிவிட்டு மறு துணியைப் பொருத்தவும்.

Note:

தையல் இடைவெளி ஒவ்வொரு பக்கமும் 1 1/2" விடவும்.

பொட்டுத் துணி ,கட்டம் போட்ட துணி கோட்டுத் துணிகளின் கழிவு துணிகளில் குழந்தைகளுக்கான படுக்கை விரிப்பு அழகிய கைப்பைகள் தைக்கலாம் அளவீடுகள் வடிவங்கள் முக்கியமானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Baby Towel Blanket

அளவுகள் :-

30"x 30" 2 துணிகள்

29x29" Sponge or Padding

9" இருபக்கங்களும் 12" 1 பக்கமும் கொண்ட 2 முக்கோண துணிகள்

1 1/2" அகலமான 5 m றிபன்

2 அமுக்கும் தெறி

20" படிப்பான நூல்.

தைக்கும் முறை:

★ 30" நீள அகலமான துணியை சுற்றி றிபனால் Frill தைக்கவும்.

★ அதன் மேல் Paddng வைத்து சுற்றித் தைக்கவும்.

★ மேல் துணியை 4 பக்கமும் சிறிதாக ஒரு மடிப்புத் தைக்கவும்.

★ பின் முக்கோணத் துணியை 12" அகலமான பக்கத்தை மெல்லிய லேஸ் கொண்டு தைக்கவும்.

★ முக்கோணத் துணியை 30"x30" மறுதுணியின் 1 பக்க மூலையோடு இணைத்து சிறிய மடிப்பிட்டு நாலுபக்கமும் நேர்த்தியாக்கவும்.

★ பின்னர் Padding தைத்த துணியை மூடித் தைக்கவும்.

★ முக்கோணத் துணியின் எதிர் பக்கத்தில் ஒரு அமுக்கம் தெறி, அடுத்த இரு மூலைகளிலும் ஒன்றையொன்று மூடுமாறு ஒரு தெறியும் தைக்கவும்.

★ முக்கோணத் துணியின் இருப்பக்கத்திலும் நூலை இரண்டாக வைத்து தைக்கவும்.

★ Baby யின் தலையை முக்கோணத் துணியின் உள்ளே வைத்து இருப்பக்கங்களையும் மூடி தெறியை அமுக்கி எதிர்ப்பக்கத் தெறியையும் அமுக்கி பயன்படுத்தவும்.

Note:

தையல் இடைவெளி ஒவ்வொரு பக்கமும் 1 1/2" விடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Baby Pillow Cover

அளவுகள் :-

10" நீளமும் 8" அகலமுமான 1 துணி

6" நீளமும் 8" அகலமுமான 2 துணி

54" நீளமும் 2" அகலமுமான 1 துணி

2 அமுக்கும் தெறி

54" நீளமுடைய மெல்லிய லேஸ்.

தைக்கும் முறை:

★ Prill க்கான துணியை சுற்றி Less தைக்கவும்.

★ மறுபக்கம் நூலோடுச் சுருக்கவும்.

★ 6" நீளமான துணிகளை 1" மடிப்பிட்டு முக்கும் தெறி தைக்கவும்.


★ 10" நீளமான துணியை சுற்றி Prill தைக்கவும்.

★ அதன் மேல் தெறி தைத்த துணியை பொருத்தி நல்ல பக்கம் திருப்பவும்.

Note:

தலையணை உறையின் மேல் பக்கம் உயனெ Hand Embroidery வேலை செய்யலாம்.


மெல்லிய நிறத்திலான Cotton துணியே சிறந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Princes Line




Sleeve

AOகை உயரம்

CDகை அகலம் ( தடித்தப் பகுதிய)

EFகைச் சுற்றளவு

AB அடிப்படை அளவு 4 1/2

x, x, C A, A D யின் நடுப்புள்ளிகள்.

மினுமினுப்பான துணிகள் நெற் துணிகள் கொண்டு அழகிய பூக்கள் செய்யலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Bra cut Saree blouse (1)

அளவுகள் :-

மார்புச்சுற்றளவு46 ÷4=11 1/2 (I)

11 1/2+2=13 1/2 (II)

நீளம் or உயரம் 16

கழுத்துச் சுற்றளவு14 ÷4=3 1/2 (I)

3 1/2- 1/2=3 (II)

தோள்பட்டை அளவு

இடுப்புச்சுற்றளவு÷4

கை — கை உயரம்

கை அகலம் (தடித்த பகுதி)

கைசுற்றளவு

Yoke — நீளம் or உயரத்திலிருந்து மார்பு நடுப்புள்ளிவரை கழித்துப் பெறப்படும் அளவு

Dart — மார்பு நடுப்புள்ளியை O எனக் கொண்டு கீழ்நோக்கி நேர்கோடு வரைக.MM 2" அளவெடுத்து MOM. Dart (I) வரைக. O வை நடுப்புள்ளியாகக் கொண்டு Open பக்கம் நேர்கோடு வரைந்து L L 1" அளவெடுத்து Dart ஐ வரைக O வை நடுப்புள்ளியாக கொண்டு கமக்கட்டை நோக்கி G G1 என 3/4" Dart (II) வரைக

A B = 3"கழுத்துச்சுற்றளவு ( I)

A C = 3 1/2கழுத்துச்சுற்றளவு ( I)

B D =தோள் பட்டை அளவு

$DD_1$ = தோள் சரிவு 1"

E F = மார்புச் சுற்றளவு ÷ 4

G = மார்பு நடுப்புள்ளி

A E = மார்புச் சுற்றளவு ÷4 =11 1/2 (I)

E F = மார்புச் சுற்றளவு ÷4 = 11 1/2 + 2 = 13 1/2 (II)

A J Blouse நீளம் or உயரம்

$JJ_1$ = இடுப்புச் சுற்றளவு ÷ 4

$P_1 P_1 Q_1 Q_1$ 1/2" or 2 " மேல் நோக்கிய Bra Cut வளைவு

Atuv Yoke

Yoke — SVமார்புச்சுற்றளவு ÷4

TU இடுப்புச்சுற்றளவு ÷ 4

கை — AO கை நீளம்

CD கை அகலம் (தடித்த பகுதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EF கை சுற்றளவு

AB தடித்த பகுதி 4 1/2" அடிப்படை அளவு

CA, AD யின் நடுப்புள்ளிகள் X,X

CX, $X_1$ D என் உள்நோக்கி 3/4" வளைக்கப்பட்டுள்ளன

XA, AX என்பன வெளிப்பக்கமாக 3/4" வளைக்கப்பட்டுள்ளன

**தைக்கும் முறை**

Dartகளை தைக்கவும்

Yoke உடன் Dart பகுதியை இணைக்கவும்

முன் பின் பகுதி தோள்களை இணைக்கவும்

கைகளை இணைக்கவும்

Openபகுதியை நேர்த்தியாக்கவும்

கையிலிருந்து தொடங்கி Side ஐ தைக்கவும்


**Note:**

அளவு உதாரணமாக தரப்பட்டுள்ளது. அவரவர் சொந்த அளவுகளில் தைக்கவும்.

நடுப்புள்ளி G யிலிருந்து 3" கீழ் நோக்கி எடுத்து வரைக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




துணிகள் கிழிந்து விட்டால் stiff ஐ உட்புறமாக ஒட்டி பின்னர் மூடித் தைக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Princess Line Saree Blouse (II)

அளவுகள் :-

முன்னர் தரப்பட்டுள்ளன

தைக்கும் முறை:


Princess Cut ஐ இணைக்கவும்.
தோள் முன் பின்னை இணைக்கவும்.
கையை இணைக்கவும் ( Puff Sleeve )
Open தைக்கவும்.
கழுத்தை தைக்கவும்.
கீழ் மடிப்பை தைக்கவும்.

Note:

Back Open சிறந்தது
Puff sleeve ஆக சுருக்கி கையை Band துஉடன் இணைக்கவும்.
Cup வைத்து தைத்தால் நேர்த்தியாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செய்யுகை நார்களினால் உருவாக்கப்பட்ட சாறிகள் கிழிந்து விட்டால் கதவுச்சீலை, கதிரைச்சேலை, கவுன் உறை என்பன தைக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Princess Line Bra cut Saree Blouse

அளவுகள் :-

முன்னர் தரப்பட்டுள்ளன

X Y கழுத்துச் சுற்றளவு 3 1/2 II

X Z கழுத்து ஆழம் 3 ( I )

Y C தோள்பட்டை அளவு 3 1/2 II

C D தோள் சரிவு 1”

A B C Princess Cut

B மார்பு நடுப்புள்ளி

M N மார்புச் சுற்றளவு

X Q தோளிலிருந்து Bra cut வரையான நீளம்

Q, Q, S, S, 1” ot 2” மேல் நோக்கிய Bra cut வளைவு

X G முழு உயரம்

X G I H Blouse இன் பின்பக்கம்

தைக்கும் முறை:

Princess Cut ஐ தைக்கவும்.

Yoke ஐ மேற்பகுதியுடன் இணைக்கவும்.

முன் பின் தோள் பகுதிகளை இணைக்கவும்.

கையை பொருத்தவும்.

கழுத்தை தைக்கவும்.

கையிலிருந்து Side பகுதியை தைக்கவும்.

Open தைக்கவும்

பின் பக்க கீழ்ப் பகுதியை தைக்கவும்.

Note:

Princess Line வெட்டு முன் பின் பனுதியை வெட்டவும்.


Back open சிறந்தது.

முழங்கை வரையான Sleeve எடுப்பாயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Armcole cut Saree blouse




பட்டுச்சாறிகள் கிழிந்து விட்டால் முழுநீளப்பாவாடை சட்டை தைக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Armcole cut Saree blouse

அளவுகள் :-

முன்னர் தரப்பட்டுள்ளன

மார்புச் சுற்றளவுடன் கை நீளத்தையும் கூட்டவும்

மார்புச் சுற்றளவு $46 \div 4 = 11\ 1/2$ (I)

$11\ 1/2 + 2 = 13\ 1/2$

கை நீளம் $4 + 13\ 1/2 = 17\ 1/2$

கைச் சுற்றளவு $12 \div 2 = 6 + 1/2 = 6\ 1/2$

தைக்கும் முறை:

Bra cut க்கான dart களை தைக்கவும்.

Yoke உடன் பொருத்தவும்.

கழுத்திலிருந்து கமக்கட்டு வரையான கையை முன் பின் கீழ்ப்பகுதியுடன் பொருத்தவும்.

கழுத்து கை ஓரங்களை தைக்கவும்.

Open தைக்கவும்

பின் பக்க கீழ்ப் பகுதிக்கு hem தைக்கவும்.

Note:

கை தனியாக வெட்டப்படுவதில்லை

கழுத்திலிருந்து கைவரை ஒரே துணியாகும்

கமக்கட்டில் இருந்து 2 1/2" முன்னோக்கியும் முன்கழுத்தில் ஆழத்திலும் நேர்கோடு வரைந்து வெட்டவும்.

Back open சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுக்குச் சுருக்குப் பாவாடை

அளவுகள் :-

இடுப்புச் சுற்றளவு 30"+15 = 45

முழுநீளம் 27/ 3 = 9

இடுப்புச் சுற்றளவுவோடு பாதி மடங்கு கூட்டவும்

45" நீளமும் 9" அகலமுமான 1 துணி

90" நீளமும் 9" அகலமுமான 1 துணி


105" நீளமும் 9" அகலமுமான 1 துணி


தைக்கும் முறை:

மூன்று துணிகளையும் நூலோடுச் சுருக்கவும்
ஒன்றுடன் ஒன்றைப் பொருத்தவும்.
மேல்துணியுடன் Elastic தைக்கவும் or Band இணைக்கவும்
கீழ் மடிப்பு இணைக்கவும்.

Note:

தையல் இடைவெளி விடவும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Balloon Skirt

அளவுகள் :-

இடுப்புச் சுற்றளவு $30 \div 4 + 1$ } Band
இடைச்சுற்றளவு $34 \div 4 + 1$

பாவாடையின் நீளம் = Yoke + கீழ்ப்பகுதி

முழு நீளத்திலிருந்து Yoke ஐ கழித்து மிகுதியை சுருக்குவதற்கு எடுக்கவும்.

தைக்கும் முறை:

Balloon அமைப்பைப் பெற உட்பக்கம் Lining வைத்து தைக்க வேண்டும்.

Skirt சுருக்குக்கான துணியின் நீளம் 3” or 4” கூடுதலாக இருக்க வேண்டும்.

Lining துணி பாவாடையின் நீளத்தைவிட (சுருக்குப்பகுதி) 3” குறைவாக இருக்க வேண்டும்.

A B - இடுப்புச் சுற்றளவு

C D - இடைச்சுற்றளவு

சுருக்குக்கான துணியை

இடைச்சுற்றளவோடு 5” கூட்டவும்

இடைச்சுற்றளவு $34 \div 6.8 + 5 = 11.8$

Liningதுணியை இடைச்சுற்றளவுக்கே எடுக்கவும்.

வெளித்துணியை சுருக்கு Lining சேர்த்து பொருத்தவும்.

நல்ல பக்கம் திருப்பி இரண்டு துணிகளையும் சேர்த்து Yoke உடன் பொருத்தவும்.


Side க்கு Zip வைக்கவும்.

Note:

மேல்துணி சுருக்கு Lining உடன் இணைத்து தைக்கவும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










பருத்தி ஆடைகள் பழுதடைந்து கிழிந்து விட்டால் கிழிவுகளைப் பொருத்து தலையணை உள்ளுறை .இரவங்கி, போன்றன தைக்கலாம் சமையலறை பிடிதுண்டுகளாகவும் பயன்படுத்தலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Nighty

அளவுகள் :-

மார்புச் சுற்றளவு46 ÷4 = 11 1/2 (I)

11 1/2 +2 (II)

தோள்பட்டை அளவு 14 ÷ 2 = 7

கழுத்துச் சுற்றளவு 14 ÷ 4 = 3 1/2 (I)

3 1/2 - 1/2 = 3 (II)

நீளம்

இடுப்புச் சுற்றளவு 40 ÷ 4 = 10

இடைச்சுற்றளவு 50 ÷ 4 = 12 1/2

A B = கழுத்துச் சுற்றளவு (I)
A C = கழுத்துச் சுற்றளவு (II)
B D = தோள்பட்டை
D E = தோள் சரிவு 1"
A F = மார்புச் சுற்றளவு (I)
F G = மார்புச் சுற்றளவு (II)
F F = 3" கூட்டப்பட்டுள்ளது
F N = 3" or 5" சுருக்குவதற்கு கூட்டப்பட்டுள்ளது
H I = இடுப்புச் சுற்றளவு.
J K = இடைச்சுற்றளவு.
M M = 2" மேல்நோக்கிய வளைவு

தைக்கும் முறை:

முன்பக்க கீழ்ப்பகுதியை நூலோடிச் சுருக்கவும்
Yoke இன் Open பகுதியை நேர்த்தி செய்து சுருக்குடன் இணைக்கவும்
தோள்பகுதியை (முன் பின்) இணைக்கவும்
கழுத்துக்கு கைக்கு Cross piece வைத்து தைக்கவும்.
கீழ்மடிப்பு தைக்கவும்.

Note:

பருத்தித் துணியே சிறந்தது
Yoke பகுதிக்கு லேஸ் கொண்டு அழகுப்படுத்தலாம்.
பின்பக்கம் Yoke வெட்டியும் தைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தையல் வகைகளும் பயன்பாடுகளும்

துணிகளை வெட்டி ஆடைகளாக காணப்படுத்வதற்கு தையல் ொரிதும் உதவுகின்றன தையல் அடிப்படைத்தையல் அலங்காரத்தையல் நுட்பத் தையல் என 3 வகைப்படும் அடிப்படைத்தையல் பெருநூலோடுதல் சிறுநூலோடுதல் அடையாளமிடுவதற்கு நூல் இழுத்தல் விஸ்பம் சோம் தையல் என்பன அடங்கும்

அலங்காரத்தையலில் சங்கிலித்தையல் கம்பளித் தையல் சற்றின் தையல் மீன்முள்ளுத் தையல் பிரான்சிய முடிச்சு நரம்புத்தையல் காம்புத்தையல் நூல் இழுத்துச்சோம் தையல் சோம்பேறித்தையல் குறுக்குத்தையல் அலங்காரச்சுருக்குத்தையல் அடைப்புத்தையல் அப்ளிக்வேக் வீப்பீல் என்பன அடங்கும்.

அடிப்படைத் தையலில் சோம் தையலானது நூல் இழுத்து சோம் தையல் துன்னா சோம் கட்டுத் தையல் விளிம்புத்தையல் என பல வகையாக விளிம்புகளை நேர்த்தியாக்கப்பயன்படுகிறது

பெருநூலோடுதல் :- தைக்கும் போது துணியின் இரு பகுதிகளும் அங்குமிங்கும் அசையாமல் இருக்கப் பயன்படுகிறது

சிறுநூலோடுதல் :- நிரந்தர தையல் முறைக்கும் அலங்கார சுருக்கில் சிறிய சுருக்குகள் இடுவதற்கும் பயன்படும். துணியைப் பொருத்தும் போது சிறுநூலோடித் தையலை அடிப்படைத் தையலாகப் பயன்படுத்தலாம் அலங்காரத் தையலாகவும் அடிப்படைத்தையலாகவும் கூட பயன்படும்

அடையாளமிடுவதற்கு நூல் இழுத்தல் :- தையல் இடைவெளிக்கான அடையாளத்தை நூல் இழுத்து அடையாளப்படுத்தலாம்

விஸ்பம் தையல் :- தையல் இயந்திரத்தின் தையலுக்கு சமமான தையல் இது தோள்பட்டை பக்கப் பொருத்துகளுக்க கைத்தையலாகப் பயன்படும்

எதிரீட்டு விளிம்பு மடிப்புத்தையல் :- படுக்கை விரிப்பின் இழிவுகளை நேர்த்தியாக்கப் பயன்படுகிறது.

துன்னா சோம் தையல் :- இரு ஓரங்களைப் பொருத்தும் போது விளிம்புமடித்து தைக்கப் பயன்படும் தலையணை உறை மெத்தையுறை துணிப்பைகளின் ஓரங்கள் தைக்கப் பயன்படும்

கட்டுத் தையல் or மறைப்புத்தையல் :- தொலைவான விளிம்புத் தையல் தோற்றா சோம் தையல் என பெயர்கள் கொண்ட இத் தையல், விளிம்புகளை நேர்த்தியாக்கப் பயன்படும் கை கழுத்துப் பகுதிகளை நேர்த்தியாக மிக இலகுவாக தைக்கப்பயன்படும்

சங்கிலித்தையல் chain stitch :- சங்கிலி போன்ற இத்தையலால் பூக்கள் பழங்கள் இலைகளை முழுமையாகத் தைக்கலாம் இரண்டு வண்ண நூல்களை இணைத்துஅலங்காரமாகத் தைக்கலாம்

கம்பளித் தையல் blanket stitch :- அப்ளிக் வேலை செய்யும் கதவுச்சீலைகள் தனிப்பட்ட உடைகளின் விளிம்புகளை பல நிற நூல்களில் தைக்கப் பயன் படுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றின் தையல் :- பூ இலை நரம்பு தைக்கப்பயன்படும் இதனைத் தைக்கும் போது சாய்ந்து வரும் தையல்களுக்கிடையில் இடைவெளி இன்றித் தைக்க வேண்டும் வடிவங்களின் ஓரங்களில் சிறுநூலோடித் தைத்த பின் சற்றின் தையல் தைப்பதால் அதிகளவு பூரணத்துவம் கிடைக்கும்

மீன்முள்ளுத் தையல்Herring bonestich :- உடைகளின் ஓரங்களையும் மூன்று இதழ்களையுடைய பூக்களையும் இத்தையலால் அழகுபடுத்தலாம் flanal துணிகளின் ஓரங்களையும் தைக்கலாம்

பிரான்சிய முடிச்சு or சிதுமுடித் தையல் French knotstich :- பூக்களின் நடுவிலும் சிறிய மலர்கள் பூக்களின் மகரந்த மணிகளையும் தைக்கப் பயன்படும்

நரம்புத் தையல் :- திரும்பத் தைத்தல் வெளிரேகைத் தையல் எனவும் அழைக்கப்படும் இத் தையல் இலைகள் நரம்புகள் பூக்காம்புகள் தைக்கப் பயன்படும் கீழிருந்து மேலாக or இடமிருந்து வலமாக தைக்கலாம்

காம்புத் தையல் stem stich:- பூக்களின் காம்புகளை தைப்பதால் காம்பத் தையல் என அழைக்கப் படும் மெல்லிய காம்பை ஒற்றை நூலாலும் தடித்த காம்பை இரட்டை நூல் கொண்டும் தைக்க வேண்டும்

சோம்பேறித் தையல் lasy daizy stich:- பூ இதழ்களை தைக்கப் பயன்படும் விரைவாக தைத்து முடிவதால் சோம்பேறித் தையல் என அழைக்கப்படும்

குறுக்குத் தையல் cross stich:- இழைகளை எண்ணக்கூடிய துணிகளில் தைக்கக்கூடிய அலங்காரத் தையல் இத்தையலால் மிருகங்கள் பொம்மைகளின் உருவங்கள் தைக்கப் பயன்படும்

அலங்கார அடுக்குத் தையல் smocking:- மிகவும் மெல்லிய துணியில் தைக்கப்படும் அலங்காரத் தையல்பெண்களின் இரவங்கி சிறுமிகளின் ஆடைகள் cussian cover கள் என்பன இத்தையலால் தைக்கலாம்

அடைப்புத் தையல் filling stich:- பூக்கள் உருவங்கள் இலைகளை நிரப்பி தைக்கப் பயன் படும் வடிவங்களை முழுமையாக மறைத்துத் தைப்பதால் அடைப்புத் தையல் எனப்படுகிறது

அப்ளிக் வேலை (applique work:-) யன்னல் கதவுச் சீலைகளிலும், மேசை விரிப்பு, படுக்கை விரிப்பு, தலையனை உறை, பாவாடை, புடவை, சிறுவர்களின் உடைகள் போன்றவற்றில் தைக்கப் பயன்படும் வடிவங்களை வெட்டி உடைகளில் வைத்து கம்பளித் தையலால் ஓரங்களை தைக்க வேண்டும்

வீப்பில் whippeol:- குழந்தைகளின் கை கழுத்து கீழ்ப்பகுதிகளுக்கு தைக்கப்படும் அலங்காரத் தையல் இது இருநிற நூல்களால் தைக்கப்படும்.

நூல் இழுத்து சோம் தையல் :- மேசை விரிப்பின் ஓரங்கள் கதிரைச் சீலையின் கீழ் மடிப்பு என்பன இத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையலைக் கொண்டு அழகுபடுத்தலாம்

## துணி இணைப்பு வேலை (patch work )

வெட்டுத் துணிகளை குறிப்பிட்ட வடிவங்களால் வெட்டி சதுரமாகவோ or வட்டமாகவோ or முக்கோணமாகவோ அவற்றை வேறொரு துணி மேல் வைத்து தைப்பது துணி இணைப்பு வேலை எனப்படும் துண்டுத் துணிகளை அழகிய வடிவமாக மாற்றுவதற்கு கலையுணர்ச்சியும் பொறுமையும் விடா முயற்சியும் வேண்டும் துணி இணைப்பில் முக்கியமானது நிறப்பொருத்தமாகும் துணி இணைப்பு வேலை மூலம் அழகுணர்ச்சி வெளிப்படும். கழிக்கப்பட்ட வெட்டுத் துண்டுகள் மீண்டும் பயன்பாட்டுக்கு உகந்ததாகின்றது.

துணி இணைப்பு வேலையில் துவைக்கக் கூடிய துணிகளோடு துவைக்க முடியாத துணிகளை இணைக்கக் கூடாது. ஒரே வகையான வடிவங்களை ஒரே அளவுகளில் இணைக்க வேண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட வடிவங்களையும் இணைக்கப்போகும் வடிவத்தையும் சரிபார்த்த பின்பே தைக்க வேண்டும்.

தைக்கப்போகும் வடிவத்தை அளவின்படி முதலில்கடதாசி மட்டையில் வெட்டி பின்னர் துணியில் வைத்து தையல் இடைவெளி விட்டு வெட்டி தைக்க வேண்டும்.

துணி இணைப்பு வேலையில் அழகிய நட்சத்திர வடிவம், பெட்டி வடிவம், சாய்வு, செவ்வக வடிவம், மிருக வடிவமைப்பு போன்றன செய்யலாம். தைப்பதன் மூலம் நேர்த்தியான உருவங்களைப் பெறலாம்

## கழுத்து வகைகள்

கழுத்துகள் பல வகைப்படும் கழுத்தானது நேர்த்தியாகத் தைக்கப்பட்டாலே ஒழுங்கான ஆடை ஒன்று உருவாகும் வட்டக்கழுத்து ப கழுத்து, U கழுத்து basket கழுத்து V கழுத்து boat கழுத்து என பல வகையான கழுத்துக்கள் எமது பயன்பாட்டில் உள்ளன.

சாறி பிளவுஸ்க்கு மெருகூட்டுவது நேர்த்தியானகழுத்தாகும், சாறி பிளவுஸ் கழுத்துகுறுக்குத் துணி (cross piece) மூலம் or நேர்த்துண்டு மூலம் or கழுத்து வடிவ துணிகள் மூலம் தைக்கப்படும் பொதுவாக எல்லாக் கழுத்துகளுமே சாறி பிளவுஸ்க்கு உகந்தது.

Boat neck தற்போது ஆடை வடிவமைப்பில் பிரபல்யமடைந்துள்ளது Top, readymade ஆடைகள் சிறுமிகளின் ஆடைகளுக்குboat neck அழகைக் கொடுக்கும், U வடிவக்கழுத்து cotton சாறிகளின் பிளவுஸ் மெல்லிய நிற சாறிகளின் பிளவுஸ் காரியாலய சீருடை சாறிகளின் பிளவுஸ்களிற்கு ஏற்றது. ஆடைகள் வெட்டும் போது கழுத்துகள் பெரிதாகி விட்டால் stoneless என்பன கொண்டு அழகுபடுத்தி சிறிதாக்கலாம்

மடிப்புகள் :- மடிப்புகள் சாதாரண மடிப்பு பெட்டி மடிப்பு என இரு வகைப்படும் சீருடைகள் முழுப்பாவாடை (ஜரிகை) போன்றவற்றுக்கு சாதாரண மடிப்பு தைக்கப்படும் சில பாடசாலைகளின் சீருடைகள் வைத்தியசாலை சீருடை என்பவற்றுக்கு பெட்டி மடிப்பு பயன்படும் .


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ காலத்துக்கு காலம் மாறுபடும் ஆடைகளுக்கு மாறுதல்கள் அவசியம்.

★ அறிஞர் அண்ணா தையற்கலையை விரும்பிக் கற்றவர்.

★ தைக்கப்படாத துணிகள் தொகுக்கப்படாத மாலைகள். தைக்கப்பட்ட ஆடைகள் வனப்புடன் கட்டப்பட்ட மாலைகள்.

★ அழுகுக்கு அழகு சேர்ப்பவர்கள் தையற்கலைஞர்கள். நேர்த்தியாக தைக்கப்பட்ட ஆடைகள் ஒருவரது இறைமையை தக்கவைக்கிறது.

★ 1839 அமெரிக்க நாட்டு எலியாஸ் றோவ் என்பவரால் தையல் இயந்திரம் கண்டுப்பிடிக்கப்பட்டது.

★ 1851 ஷேக்மெரிட் சிங்கர் என்பவரால் சிங்கர் தையல் இயந்திரம் கண்டுப்பிடிக்கப்பட்டது.


★ 15ஆம் நூற்றாண்டில் எரிக்ஷன் கத்தரிக்கோலை உருவாக்கினார். (அமெரிக்கா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## நன்றி மலர் தூவி...

"தையலர்க்கான தையற்கலை" என்னும்
இந்நூலை நூலுருவாக்க
சகல வழிகளிலும் ஒத்துழைப்பு
வழங்கியவர்களுக்கும்,
ஒப்புநோக்கி சில திருத்தங்கள் செய்து
ஆசியுரை எழுதிய ஆசிரிய ஆலோசகர்
திருமதி மோகனசுந்தரம் அவர்களுக்கும்,
குறுகிய காலத்தில்
நூலாக உருவாக்கி தந்த
ES Printers இற்கும், பணியாளர்களுக்கும்
மனம் நிறைந்த நன்றிகள்.
எல்லாவற்றுகம் மேலாக
போதிய ஞானத் தெளிவையும்,
தெளிவான மனநிலையையும் தந்து
என்னை வழிநடத்திய ஆண்டவருக்கு
கோடானகோடி நன்றிகள்.

நூலாசிரியர்.

ES Printers

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org